உதயதாரகை—MORNING STAR.

Published on the 2d and 4th Thursday of every Month at two shillings a year, payable in advance.

௰ம். புத்தகம், சஞ்சிகை ௨௰.] ௲௮௱௫௰ம் ௵. ஐப்பசி ௴. ௨௪. வ. வியாழக்கிழமை.—Thursday, October 24, 1850. [Vol. X. No. 20.

TERMS OF THE PAPER.

For each copy—*two shillings a year*—PAYABLE IN ADVANCE.

To *Subscribers who receive the Paper by mail*, each copy, *exclusive of postage—four shillings a year.*

The difficulty of remitting small sums from distant places may be obviated by *five subscribers' uniting their subscriptions and remitting them together in a single pound note.*

The names of Subscribers will be published; and *all receipts of money* will be regularly acknowledged on the last page of the Paper.

Subscribers on the Continent may receive the paper at *four shillings a year*, their papers having to be sent by mail, and a postage of *one penny*, being *prepaid* on each. This is exclusive of Continental postage.

Agents are requested to receive no subscriptions except in conformity with the above terms.

Advertisements will be inserted as heretofore at the rate of *one penny and a half* each line, reckoning the type at Brevier size or seven and a half lines to an inch.

All Notices of Deaths and Marriages will be chargeable as Advertisements.

Communications should be *post paid* to receive attention

JAFFNA—The Missionaries.
POINT PEDRO—Rev. E. J. Robinson.
CATTAVELY—Mr. J. White
TRINCOMALIE—Rev. J. Walton.
COLOMBO—Messrs. P. B. Fernando & Son.
KANDY—Mr. L. Lawton.
TRANQUEBAR—Mr. Jeddidiah Adams.
BATTICALOE—Rev. J. Gillings.
MADURA—Rev. C. F. Muzzy.
MADRAS—P. R. Hunt, Esq.
ISLE OF FRANCE—Mr. George Cok.

On Caste.

குலாசாரம்.

௬. சாதிவேற்றுமை பார்க்குந் தன்மை உங்கள் ஆத்துமாக்களுக்கும், மற்றவர்களுடைய ஆத்துமாக்களுக்கும் நஷ்டமாயிருக்கும். எப்படியென்றால், எனக்குப் பின்செல்லுங்களென்றும், நான் உங்களில் அன்புகூர்ந்ததுபோல நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்களென்றும், உங்களைப் பெருமையாக்காமல் என்னைப் போலச் சாந்தமாயும், மனத் தாழ்மையாயும் இருங்களென்றும், நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புகூர்ந்தால், உலகத்தார் உங்களை என்னுடைய சீஷர்களென்றறிவார்களென்றும், (யோவான், ௩. ௰௫.) நம்முடைய இரட்சகர் சொல்லியிருக்க, நீங்கள் சாதிபேதம் பார்த்து அகந்தைகொண்டு நடந்தால், நீங்கள் இயேசுநாதருடைய சீஷர்களாயிருக்கமாட்டீர்கள். உங்கள் ஆத்துமாவுக்கு அதினாலே நஷ்டமுண்டாகுமேயன்றி, யாதொரு பிரயோசனமும் வரமாட்டாது. தன்னைத்தானே வெறுத்து எனக்குப் பின்செல்லாதவன் என்னுடைய சீஷனாயிருக்கக் கூடாதென்று இயேசுநாதர் சொன்னார். (லூக். ௰௪. ௨௭. மத். ௰௬. ௨௪.) அகந்தையுள்ளவர்களைப் பராபரன் விரோதித்து மனத்தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையாயிருக்கிறாரென்று பேதுரு அப்போஸ்தலன் எழுதினார். (௧. பேதுரு, ௫. ௫.) நீங்கள் பிள்ளைகளைப்போலாகாமலுங் குணப்படாமலும் இருந்தால் மோட்ச இராச்சியத்தை அடையமாட்டீர்களென்று இயேசுநாதர் சொன்னார். (மத். ௰௮. ௩.) குழந்தைகளுக்குள்ளே சாதிவேற்றுமை பார்க்கிற குணமிருக்குமோ? இருக்கமாட்டாதே. பின்னை நீங்களும் அப்படியிராமல், பாதி கிறிஸ்துமார்க்கத்திலேயும், பாதி அஞ்ஞான மார்க்கத்திலேயும் நடந்து அகந்தையாயிருந்தால், உங்களுடைய ஆத்துமாவுக்கு நஷ்டம் வராமலிருக்குமா? அப்படிப்பட்ட மனது உங்களுக்கிருந்தால் நீங்கள் சந்தோஷத்தோடே இயேசு இரட்சகரை நோக்கி வேண்டுதல்பண்ணுகிறதற்கு மனதிருக்கமாட்டாதே. அல்லாமலும், உங்களுக்கு அவர் தம்முடைய அன்பையுஞ் சமாதான சவுக்கியத்தையும் அனுபவிக்கக் கொடாமல், உங்களைக் கக்கிப்போடுவோமென்று சொன்ன வசனத்தை நன்றாய்ச் சிந்தித்துப் பாருங்கள். (அறிவி. ௩. ௰௬.)

மேலும் நீங்கள் கிறிஸ்துமார்க்கத்திலே முன்னேறி நடந்து அன்பு, மனத்தாழ்மை முதலான நற்குணங்களை அதிகமதிகமாய் அடைந்து வெளியரங்கமாய்க் காண அறிவிலுந் தேறிப் பத்தியிலும் முதிர்ந்தவர்களாய் இருக்கவேண்டுமே. சாதிவேற்றுமை பார்த்து நடந்தால் நீங்கள் அப்படித்தேறி முதிர்ந்த கிறிஸ்தவர்களாயிருக்கமாட்டீர்கள். உங்கள் அன்புங் குறைவுபட்டுப்போம். அதினாலே உங்கள் ஆத்துமாவுக்கும் நஷ்டமுண்டாகுமென்பதை அறிவீர்கள். அல்லாமலும் மற்றவர்களுடைய ஆத்துமாக்களுக்கும் அதினாலே நஷ்டமுண்டாகும். எப்படியெனில், நீங்கள் சாதிபேதத்தினால் மற்றக் கிறிஸ்தவர்களை அசட்டைபண்ணி அசுத்தரென்றெண்ணி அவர்களுக்குத் துக்கம்வரப்பண்ணுவீர்கள். உங்களைக்கிறிஸ்தவர்களென்றெண்ணுகிறவர்கள் உங்களை அன்பில்லாமல் அஞ்ஞானிகளைப்போல நடக்கக்கண்டால், அவர்களுடைய மனதுக்குத் தடையுண்டாகும். அதினால் அவர்களும் ஒருவிதமாய் அஞ்ஞானிகளைப்போல நடக்க எண்ணுவார்கள். அப்படிச் செய்தால் அவர்களுடைய ஆத்துமாக்களுக்கும் உங்களாலேநஷ்டம்வருவதுமாத்திரமல்ல, அஞ்ஞானிகளுக்கும் நஷ்டம்வரும். எப்படியென்றால், நீங்கள் இயேசுநாதருடைய சுவிசேஷத்தின்படியே ஒரே மனப்பட்டு அன்பும் மனத்தாழ்மையும் உள்ளவர்களாக நடந்துவருகிறதை அஞ்ஞானிகள் கண்டால், இந்தக்கிறிஸ்தவர்கள் ஒருவரிலொருவர் எவ்வளவு அன்பாய் இருக்கிறார்களென்று ஆச்சரியத்தோடே சொல்லி அவர்களுங் கிறிஸ்துமார்க்கத்திற் சேருவார்கள். நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாய் நடவாமற் சிலரை ஏற்றசாதி என்றுஞ் சிலரை அன்னியசாதியென்றும் வித்தியாசம் பார்த்து நடந்தால், அவர்கள் இந்த மார்க்கத்திற் சேராமல் தடைப்பட்டிருப்பார்கள். மேலும் நீங்கள் சிலரை கீழ்ச்சாதியென்று சொல்லி அசட்டைபண்ணும்பொழுது, அவர்களோடே கூடி ஒருமித்து வேண்டுதல் பண்ணக்கூடாது. அதினாலே மற்றவர்கள் இரட்சிப்பைத் தேடாமல் தடைப்பட்டுப் போவதுமல்லாமல், கீழ்ச்சாதியானவர்களை நீங்கள் அருவருத்துத் தள்ளும்பொழுது அவர்களுக்காக உருகவும் அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கவுங் கூடாது. ஆகையாற் கிறிஸ்துநாதர் நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பு கூருகிறவர்களானால், உலகத்தார் உங்களை என்னுடைய சீஷர்களென்று அறிந்திருப்பார்களென்று சொன்ன வசனத்தை நினைத்துச் சாதிவேற்றுமை பார்ப்பதைத் தள்ளக்கடவீர்கள்.

அதைப் பாராதிருந்தால் உலகத்தார் எங்களை நிந்திப்பார்களென்றுஞ் சொல்லுகிறீர்கள். அப்படி இயேசுக்கிறிஸ்துவின் நிமித்தம் நீங்கள் சாதி வேற்றுமையைத் தள்ளுகிறபொழுது, உலகத்தார் உங்களை நிந்தித்தாலுமென்ன? விசனப்படவேண்டாம். கிறிஸ்துநாதரையும் நிந்தித்தார்களல்லவோ? பேதுரு அப்போஸ்தலன் சொன்னபடி நீங்களும் அப்படிப்பட்ட நிந்தையைக் குறித்துப் பராபரனைத் தோத்திரஞ்செய்யவேண்டும். (௧. பேது. ௪. ௰௬.) எக்காலத்திலேயும் மெய்க் கிறிஸ்தவர்கள் உலகத்தாருடைய பொல்லாத வழக்கங்களின்படி நடவாமல் அவருடைய கட்டளைகளின்படி நடப்பதினால் உலகத்தாராலே துன்பப்படுவார்கள் என்பதை அறிந்து இயேசுநாதர் தம்முடைய சீஷருடனே என்னிமித்தமும் நீதியினிமித்தமுந் துன்பப்படவந்தாற் சந்தோஷப்படுங்கள். உங்களுக்கு அதினால் வரும் பலன் பெரிதாய் இருக்கின்றதென்றார். (மத். ௫. ௰௧.) மேலும் அவர் ஒருவன் தன்னை வெறுத்துச் சிலுவை மரத்தை எடுத்து எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாய் இருக்கக் கூடாதென்றும், என்னைப் பார்க்கிலும் தன் தகப்பன், தாய், சினேகிதர் முதலானவர்களை அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்லவென்றுந் திருவுளம்பற்றினார். (மத். ௰. அதி. ௩௭. ௩௮.)

ஆதலால் முதலாவது நீங்கள் இயேசுநாதரை அண்டிக்கொண்டு அவருடைய கட்டளைகளின்படி நடந்து அவர் உங்களில் அன்புகூர்ந்ததுபோல நீங்களும் மற்றவர்களில் அன்பு கூர்ந்து மனத் தாழ்மையாய் நடக்கக்கடவீர்கள். அதைக் குறித்து உலகத்தார் உங்களை நிந்தித்து உபத்திரவஞ்செய்தால் அதைக் கத்தாவுக்கே சொல்லி முறையிட்டு வேண்டுதல்பண்ணவேண்டும். சைவ சமயத்தாருக்குள் ஞானிகளென்னப்பட்டவர்கள் சாதிவேற்றுமை பாராமல் எந்தச் சாதியாரையும் ஏற்றுக்கொண்டு போசனபானம்பண்ணுகிறதுமல்லாமல் பசிகண்டபொழுதே அகப்பட்ட போசனத்தைச்சாப்பிடுவார்கள். விருப்பத்தோடே எவன் கொடுப்பானோ அதை ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆருடைய வீட்டிலே நித்திரைசெய்யவந்ததோ அந்த வீட்டிலே நித்திரை செய்வார்கள். இப்படிச் சத்திய வேதத்தை அறியாதவர்களாகிய அவர்கள் தங்கள் மன நியாயத்தின்படி செய்யச் சத்தியவேதத்தை அறிந்தவர்களாயும், மெய் ஞானிகளாயும், அவர்களை அஞ்ஞானிகளென்று சொல்லுகிறவர்களாயுமிருக்கிற நீங்கள் அவர்களைப்போலாகிலும் நடக்கவேண்டாமா? அல்லாமலும், சாதிவேற்றுமை பார்த்து நடந்து மற்றவர்களுக்கு அன்பும் மனத் தாழ்மையுமுள்ளவர்களாயிருக்கலாமேயெனில், நாம் வசனத்தினாலே மாத்திரமல்ல, செய்கையினாலும் உண்மையினாலும் அன்பாயிருக்கக்கடவோமென்று யோவான் அப்போஸ்தலன் சொன்னதையும், (௧ யோவா. ௩. அதி.) எந்த மனிதனையும் ஏலாதவனென்றும், அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்குப் பராபரன் எனக்குக் காண்பித்தாரென்று அப்போஸ்தலனாகிய பேதுரு சொன்னதையும், (அப்போஸ். ௰. அதி. ௨௮.) பழைய மனிதத்துவத்தையும் அதினுடைய செய்கைகளையும் நீங்கள் கழற்றிப்போட்டுத் தன்னைச் சிருட்டித்தவருடைய சாயலுக்கேற்ற அறிவுண்டாகும்படிக்குப் புதிதாக்கப்பட்ட புதிய மனிதத்துவத்தைத் தரித்துக்கொண்டவர்களாய் ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள். அங்கே கிரேக்கரென்றும், யூதனென்றும், விருத்தசேதனமுள்ளவனென்றும், விருத்தசேதனமில்லாதவனென்றும், புறத்தேசத்தானென்றும், ஸகீத்தனென்றும், அடிமையென்றும், சுவாதீனனென்றும் (சொல்லப்பட்ட வேற்றுமை) இல்லை. கிறிஸ்துவே எல்லாருக்குள்ளும் எல்லாமுமாயிருக்கிறாரென்று கொலோசேயருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னதையும் பாருங்கள். (கொலோ. ௩ அதி. ௯; ௰. அதி. ௰௧—௰௨.)

அல்லாமலும், சாதிவேற்றுமைபாராமல் அதைத் தள்ளி நடந்தால், உங்கள் இனங்களுக்குள்ளே விவாகம் நடக்கமாட்டாதென்றுஞ் சொல்லுகிறீர்கள். இப்படிச் சொல்வது நல்ல புத்தியோ? உங்கள் பிள்ளைகள் எப்படிப்பட்டவர்களுடனே விவாகசம்பந்தம்பண்ணவேண்டும்? அஞ்ஞானிகளுக்குள்ளேயாவது, உரோமான் சபையார்களுக்குள்ளேயாவது, மற்றுந்தேவபத்தி இல்லாதவர்களுக்குள்ளேயாவது விவாகம் பண்ணலாமா? மெய்க் கிறிஸ்தவர்களுக்குள்ளே தானே விவாகம் பண்ண வேண்டும். அப்படிச் செய்தால் வருத்தம் உங்களுக்கு வரமாட்டாது. விவாகம் பண்ணுகிறதற்காக யேசுநாதருடைய கட்டளைகளைத் தள்ளிச் சாதிபேதம் பார்த்து நடந்தால், உங்களுக்குத் தேவ ஆசீர்வாதம் வருமோ? பவுல் அப்போஸ்தலனும் நீங்கள் ஒரே நுகத்திலே அவிசுவாசிகளுடனே பூட்டப்படாதிருப்பீர்களாக. ஏதினாலெனில், நீதிக்கும் அக்கிரமத்துக்கும் என்ன சம்பந்தமிருக்கின்றது? இருளுக்கும் ஒளிக்கும் ஐக்கியமென்ன? கிறிஸ்துவுக்கும் பசாசுக்கும் இசைவுண்டா? அல்லது அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்குண்டா? விக்கிரகக் கோவில்களுக்கும் பராபரனுடைய ஆலயத்துக்குஞ் சம்பந்தமுண்டா? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி அவர்களுக்குள்ளே நடந்து அவர்களுடைய தேவனாய் இருப்பேன். அவர்கள் என்னுடைய சனங்களாயிருப்பார்களென்று பராபரன் சொன்னபடி, நீங்கள் சீவனுள்ள பராபரனுடைய ஆலயமாய் இருக்கிறீர்களே. மேலும், நீங்கள் அவர்களிடத்தில் இருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள். அப்பொழுது நான் உங்களை அங்கிகரித்துக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாய் இருப்பீர்களென்றும் சருவவல்லமையுள்ள பராபரன் சொல்லுகிறாரென்றெழுதினார். (௨. கொரி. ௬. ௰௪. ௰௮.) முக்கியமான இந்த வசனங்களை நன்றாய்ச் சிந்தித்துக்கொள்ளக்கடவீர்கள்.

இன்னும் வரும்.

பாப்பரசழியப் பகரும் இத்தாலியக்
கோப்புகள் முறியக் குழப்பங்கள் சேறிய
வீசுப்புவும்பறிய வேதமும் வெறிய
மூப்பொடு முகாமை முழுவதும் அழியவே.

தாரகையே, இற்றைக்கு இரண்டொரு நாளைக்குமுன் நான் கோட்டில் நின்றபொழுது, ரோமான்குருமார் சனங்களுக்கு அதிகம் நன்மைசெய்து வருகிறார்கள் என்று, புறேடெஸ்டாண்டு குருமாரிடந் தருமமாகப்படித்து அவர்களிடம் வத்திராகாரம் முதலிய அனேக சலாக்கியங்களைப்பெற்று, கனமான உத்தியோகத்தை அடைந்து வந்த ஒருவர் சொல்லக் கேட்டபொழுது என் மனம் கூசி நொந்தேன். புறேடெஸ்டாண்டு குருமார் சனங்களுக்குச் செய்துவரும்

நன்மைகளைப் பற்றி நான் விபரமாய் எடுத்துப் பேசத்தேள்வையில்லை—அதுதானேவிளங்கும். விளக்கெரிந்தால்அது எரியுதென்று காட்டத் தேவையில்லை—அவரிடத்தில் நான் தாரகைவழியாகக் கேட்கிற மூன்று கேள்விகளென்னவெனில், இரட்சிப்பின் வழியைக் காட்டும் வேதாகமங்களை உமது குருமார் சனங்களுக்குக் கொடுக்கிறார்களா? இகபரம் இரண்டிற்குமுபயோகமான பள்ளிக்கூடங்களை ஸதாபித்துப் பிள்ளைகளைப் படிப்பிக்கிறார்களா? அவர்கள் படிப்பித்த பிள்ளைகளில் எவராகுதல் இந்நாட்டுக் கச்சேரி கோடுகளிலுத்தியோகமாயிருக்கிறார்களா? பாருங்கள் உங்கள் பள்ளிக்கூடத்தை: கொஞ்ச மாசத்திற்குமுன் ஒரு இங்கிலீசுக்காரன் வந்து ஒரு கொட்டிலையுங் கட்டிப் பலவிதமான படிப்புக்களையும் படிப்பிக்கிறேன்—எல்லாச் சிலவும் விஸபு ஆண்டவனென்று சொல்லிப் பிள்ளைகளுக்குக் கயிறுவிட்டு பிறகு ஒவ்வொரு பிள்ளைகளும் இரண்டு மாசப் பணம் முன்னேற்கனக் கட்டவேண்டுமென்று பிள்ளைகளைக் கேட்டவுடனே பிச்சைவேண்டாம் நாயைப் பிடியென்றவனைப்போலச் செபமாலையையும் பிடுங்கியெறிந்து போட்டுயோடிப்போய் இப்பொழுது ஆறன்ஸ் பாதிரியார் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள்.—இதுதான் குருமார் செய்த நன்மைகளிலொன்று.—கத்தோலிக்கருக்குள் உண்டான வழமைகளைக் கொலைத்து பேரை அவத்திற் கெடுத்து ஊரைப் பகைத்து அடுத்து வருடத்திற்கு வருடம் கலிபிலிகளும் சண்டைகளும் உண்டாக்கி கோடுகளுக்குஞ் சிறைச்சாலைகளுக்குஞ் சிறிதுபேரை ஆளாக்கிக் கோம்மிந்தான் பட்டாளங்களைக் கொண்டுவந்து நிரைக்கப்பண்ணிச்சனங்களைப் பயமுறுத்தி இங்கேபெருநாள் அங்கேதிருநாள்—இரண்டு பவுண் தாருங்கோ மூன்று பவுண் கொடுங்கோ என்று சொன்னதும் அதுவுமொருநன்மைதான். கொம்பிசத்துக்குப் போகிறவர்களுக்குப் பாவமன்னிப்புக்கொடுக்கிறார்கள் அதுவுமொரு பெரிய நன்மைதான். கூப்பிடு தூரத்திற்கு மீசாம்மூன்று? நத்தாற்றிருநாளிரண்டா? சபையையாளப் புத்திதெரியாதா?—பகையை மூளவைத்தாலெரியாதா? என்றொருவர் ஒலமிட்டது பிரியாதா? கடவுளுக்குப் பதிலாகக் கேட்டின் மகளை பாப்புவையும் மனஸ்தாபத்திற்குப் பதிலாக ... பு நோவினையையும் பரிசுத்த அன்புக்குப் ... ஆடம்பரம், குரிசு, செபமாலை, மரித்தோர் ... தலதரிசனயாத்திரையும் வைத்ததும்அவர்களு... ய பெரிய நன்மைதான். ஒன்றுமறியாமல் தீவிலுந் திடலிலுமிருந்த எங்களைப் படிப்பித்து உத்தியோகத்தில் வைத்தவர்கள் ஸ்ரீமான் குருமாரோ? புரொடெஸ்டாண்டு குருமாரோ? கண்களிருந்துங் கிணற்றில் விழலாமா? கல்லைக் கிள்ளிக் கையிழக்கலாமா? இதற்கு மறுமொழி சொல்லட்டும்.

இப்படிக்கு, ஆ. சி.

உதயதாரகையின் முகாமைத் துரைக்கு.

ஐயாவே:

இந்நாட்களிலே எமது தேசத்திலே கோள்ளை நோயென்னுங் கொடிய வியாதியின் மும்முரத்தினால் அநேகர் இறந்துபோனார்களென்றதை யாவரும் அறிவீர்களே. இவ்வியாதியினால் சென்றுபோன மாசம், உசங. தேதி எமது அயலகத்தானாகிய ஒருவர் வீட்டில் வேலைக்காரனாய் இருந்த சுவாந்தனென்னும் ஓர் பையனுஞ் சடுதியிலே மரணமடைந்தான். இப்பையனுடைய பெற்றார் உற்றார் சகலரும் ஸ்ரீமான் கத்தோலிக்க மதவிதியிற் சற்றேனும் வழுவின்றி நடந்துவந்ததுமல்லாமல் இப்பையனுங் குறித்த மதக்குருக்களால் ஞானஸ்நானம் பெற்று உறுதி பூசுதலென்னுஞ் சடங்குமடைந்து அம்மதமுறைப்படி சபையிலே சேர்க்கப்பட்டிருந்தான். இம்மதத்தோர் முறைப்படி சகலவற்றிலுஞ் சரிவர நடந்த இவ்வேழை அதிட்டங்கெட்ட பையன் சடுதி மரணித்தினாற் சணப்பொழுதில் மரித்துப்போக அம் மதமுறைப்படி மரணச் சடங்கு செய்விக்கத் தகுந்த சமையம் வாய்க்கவில்லை. இவ்வொரே கருமத்தினால் மரித்தவனின் சடலத்தைத் தங்கள் மயானஸதானத்தில் அடக்கம்பண்ணக்கூடாதென்று சாயக்காரருடைய தெருவிலிருக்கும் அடைக்கல மாதாவின் கோவிலின் மூப்புவுஞ் சங்கிறுத்தானுமாகத் தடைபண்ணினார்கள். இப்பையனுக்குப் பெற்றார், உற்றார், உதவியில்லாத பரதேசியானபடியால் இவன் சடலத்தை அஞ்ஞானிகளை அடக்கம்பண்ணுஞ் சுடலையில் அடக்கம்பண்ணினார்கள். துரைகளே, மரித்தபின்பு ஒருவனுடைய சடலத்தை எவ்விடம் புதைத்தாலுஞ் சரியே. ஆகிலும் அம்மதவிதியில் வழுவின்றி நடந்த இப்பையன் மரணச்சடங்கு செய்யச் சமையமுஞ் செய்விக்க உதவியுமில்லாமல் தடைபட்டதின் நிமித்தியம் அவன் சடலத்தை அடக்கம்பண்ண இடங்கொடுத்தல் நீதியல்லவென்று கண்டால் தடைபண்ணிய மூப்புவுஞ் சங்கிறுத்தாம்பிள்ளையுந் தங்கள் சோய நடையைச் சற்றுத்தல் திருத்தவேண்டாமா? மூப்புவின் ஞானம் சூரியன் அஸ்தமித்தபின் புளியமரத்தின் கீழும், சங்கிறுத்தாம்பிள்ளையின் ஞானம் புறக்கதவிலுங் காணலாம். துரைகளே, பரகதிசெல்லக்கூடிய பழுதற்ற பையனுடைய சடலத்தையோ அகற்றுங்கள் அகற்றுங்களென்கிறார்கள். சங்கிறுத்தாம்பிள்ளைக்குச் சவம் ஒன்றுக்குப் பணம், கூ. கொடுத்தால் முழுப்பூசணிக்காயைக் கிண்ணியிற் சாதத்தில் மறைத்துப்போடுவேனென்றாற்போலக் கதைக்கிறார். ஆசினீர்த் தண்ணீர்தானே தெளிப்பேனென்றுஞ் சாதிக்கிறார். ஆ! ஆ! இவர்களை இட்டெடென்னசொல்லலாம். இவர்களல்லவா கொசுகை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறவர்கள். ஐயையோ! என் அருமையான தாரகையே, ஊர்படுங் கலக்கத்தில் இவர்கள் பண்ணுங் கலக்கமோ சொல்லமுடியாது.

யாழ்ப்பாணம், சீதாதி. } இப்படிக்கு,
ஐப்பசி மாச. எ. தேதி. } சத்தியவாசகன்.

ஓர் வினா.

தாரகையே பின் வருமோர் சங்கைக்கு உத்தரங் கூறஉன்னை நான் பலபந்தப்படுத்தமாட்டுவேன். ஏனெனில் நமக்கு முன்னிருந்த கல்விமான்கள் வயோதிகபருவத்தில் புந்தி மழுங்கிப் புலனழியமுன் அவர்களுடன் வாதித்தும் அவர்கள் சத்தைக் கிரகித்துமேக்காலமும் பாலவயதுடையவளாய் நடுவுநிலைமை செப்புவையெனச் சிந்திக்கிறேன். நம்மூரிற் சிலர் ஆத்மஞான சாத்திர அந்தரங்கத்தை அறிஞரை அழைத்துசாவி பரலோகவாழ்வுபெறப் பரபரப்பின்றித் தங்கள் முன்னோர்களின் கோயிலில் அதிகாரஞ்செலுத்தி அசைவற்ற ஆஸ்தி நாசாந்தத்தில் அசைவற்றவையையுங் கவர்ந்து முதிராபிண்டம்போல விருந்துண்டுடுத்துறங்கி மன்றிலோர் புடைவழக்குரைக்குந் தரணிபாலருக்குச் செல்லுஞ் சிலவு தருவமெனக் கையிட்டு யாவும் விதியாலன்றி மதியாற் பெறப்படாதேனப் பிதற்றுகின்றார்களே. ஆ! என்னையாவே உன்னுத்துமா வுயந்து கரையேறவேண்டுமாகில் விதியால் மோட்சம் வரு...ன்று காகதாலி ஞாயங்காட்டாமல் நான் பாவி...னென மதியாலே மனஸதாபமடைந்து பர...த்தியரின் பத்தியங்காக்கிற் பரகதிபெறலாம். ...ரகையே மேல்வருஞ் சஞ்சிகையில் மதியோ விதியோ முதன்மையெனக்காட்டி யென்மனதையமீட்டுவாயென மன்றுடுகிறேன்.

இப்படிக்கு,
சந்தேகநிவிர்த்திப்பிரியன்.

உதயதாரகை.

௲அ௱ருயஅ ஐப்பசி மாதம், உசங தேதி.

கொழும்பு.

"கொழும்புஒப்சேவர்" என்னும் புதினபத்திரிகைக்குச் சொந்தக்காரனாயிருக்கின்ற டாக்குத்தர் எல்லியற்று என்பவர் ஒருபுறுவை வளர்த்து அதற்குச் சிறிது உபாயங்களைப்பழக்கியிருக்கிறார். எப்படியெனில், கடைசியாய்ச் சீமையிலிருந்து ஒரு புகைக்கப்பல் காலிக்கு வந்து சேர்ந்தபொழுது அந்தப்புறுக் காலியிலிருந்து எழுபத்தைந்துமயில் தூரமாகிய கொழும்புக்கு இரண்டரைமணித் தியாலத்துக்குள்ளே அதாவது இரண்டு நிமிஷத்துக்கு ஒருமயில் வீதமாகப் பறந்து கடதாசியுங்கொண்டு கொழும்புக்கு வந்து சேர்ந்தது.

இலங்கைச்சு மகாராசாவாயிருந்த லாட் தோறிங்டன் என்பவரும் அவர் சமுசாரமும் இங்கிலாந்துக்குப்போகும்படி எண்ணி இந்த மாசம், யகூ. தேதி கப்பலேறிக் காலிக்குப் போய்விட்டார்கள்.

பிரதேச சமாசாரம்.

அமேரிக்கா.—தென் அமேரிக்காவில், இப்பொழுது விலையேறப்பெற்ற அனேக போற் சுரங்கங்கள் ஏமேசோன் என்னும் ஆற்றுக்குக் கிட்டக் கண்டெடுக்கப்பட்டன. இவ்விதமாய் உலகத்தில் பல இடங்களில்பொற்சுரங்கங்கள் அதிகமாய்க் காணப்படுகிறதினாலே பொன்விலை அதிக சீக்கிரந் தணிந்துபோமென்று நினைக்கவேண்டியது.

வட்டுக்கோட்டையிற் சாத்திரப்பள்ளிக்கூடத்திற்கு வெகு வருடக்காலமாய் முகாமைத் தலைவராயிருந்த கனம்பொருந்திய கோய்சிங்றன் ஐயரிடம் இருந்து ஆவணி மாசம் போலே காகிதம் வந்து சேர்ந்தது. அவர் அமேரிக்காவிற்போய்ச் சேர்ந்த பிற்பாடு அவருக்கு இருந்த தேக சுகவீனம் இப்பொழுதுகொஞ்சத்துக்குக்கொஞ்சம் மாறி வருகுதென்று அந்தக் கடதாசியில் எழுதப்பட்டவைகளைவாசிப்பதுஅவருடைய சினேகிதர் சகலருக்கும் சந்தோஷமாயிருக்கும்.

முன்னே பிரன்சுக்காரருக்கு இராசாவாயிருந்த லூவிஸ் பிலிப்பு என்பவர் பிறகிட்ட ஆவணி, மாசம் உகூ. தேதி காலஞ்சென்றுவிட்டார்.

இங்கிலாந்து.—தூரதேசத்துப் புதினச் சங்கதிகளை உடனே அறியும்படிஇங்கிலாந்திற்கும் பிறுஞ்சு தேசத்திற்கும் இடையே ஒருவிதமான சூத்திரக்கம்பியை உண்டுபண்ணி அத்தைத் தண்ணீருக்குக் கீழேவிட்டு அதுவழியாகப் பிரதேசத்தில் நிகழும் புதினசங்கதிகளை உடனே அறிகிறார்கள்.

இந்து தேசம்

நபாபுடைய பட்டாளத்திற்கும் வேறொரு பிரதானியுடைய பட்டாளத்திற்கும் இடையே ஓர் வல்யுத்தம் நிகழ்ந்ததினால், பிரதானியுடைய கட்சியைச் சேர்ந்த இரணவீரர்களில், ருா. பேரளவுக்குக் கொல்லப்பட்டார்கள் அல்லது காயப்பட்டார்கள். மூலத்தான் பட்டினத்தில் துன்பமுண்டாகி அநேகர் இறந்துவிட்டார்கள்.

பரிசுத்தராய் இருங்கள்.

தெய்வபுத்திரனுடைய திரு உதிரத்தால் மீட்கப்பட்ட மனிதன் தூயனாயிருக்கவேண்டியது. சீவ சுதந்தரவாளியானவன் பரிசுத்தனாய் இருக்க வேண்டியது. தேவ கணங்களாற் புடை சூழப்பட்டுச் சீக்கிரந் தேவபதவிக்குப் போக இருக்கிறவன் பரிசுத்தனாய் இருக்கவேண்டியது. தேவகணங்கள் எனது ஏவற்காரரா? அப்படியானால், நான் அவர்களுக்கு உகந்தசுத்தனாய் நடக்கவேண்டியது. நாம் சீக்கிரம் போய்த் தேவ கணங்களுடன் வாசம்பண்ண இருக்கிறேனே? அப்படியானால், நான் சுத்தனாய் இருக்க வேண்டியது. பரமமாளிகைகளை இந்தக்கால்கள் சீக்கிரம் மிதிக்குமோ? இந்த நா தேவகணங்களுடனே கூடித் தேவனைத்துதிக்குமோ? இந்தக் கண்கள் நித்தியமகிமையின் சிம்மாசனத்தையும் அதில் வீற்றிருக்கும் இரட்சகரையும் பார்க்குமோ? அப்படியானால், இந்தக்கால்களும், கண்களும், உதடுகளும் பரிசுத்தமுள்ளவைகளாய் இருக்கவேண்டியன. நான் இசந்துக்குமரித்துப் பரத்துக்குச் சீவிக்கவேண்டியது.

ஆத்துமாவைக் கெடுக்கப் பெரிய பாவஞ் செய்யவேண்டியதில்லை. அதைஅற்பனாய்அசட்டைபண்ணினாலும், நிச்சயமாகவே அது கொடிய குற்றங்களைப்போலே ஆத்துமாவைக்கெடுக்கும். ஒவ்வொருவனுக்கும் பாப இருதயமுண்டு அவன் அதை இரட்சிக்கிறதற்கு வேண்டிய பிரயெத்தனம் பண்ணாதிருந்தால், அவ் இதயம் அவனைக் கெடுத்துப்போடும். ஆகையால், மோசத்தை அடையப் பெரிய பாவஞ் செய்ய வேண்டியதில்லை. ஒருவன் சன்மார்க்கனாய் இருந்தாலும் அல்லது துன்மார்க்கனாய் இருந்தாலும் நற்குணரூபவதியான புத்திரியாய் இருந்தாலும் அல்லது துற்குணச்செருக்குள்ள புத்திரியாய் இருந்தாலும் தனது ஆத்துமாவை அசட்டைபண்ணுகிறதே பெரிய பாவமாய் இருக்கும்.

வெகுகாலத்துக்கிருக்கும் விதம்.

ஒரே இடத்திலே நின்று, கூஎ. வருடக்காலமாய்ப் பிரசங்கம்பண்ணிக்கொண்டுவந்த ஒரு போதகரைப்பார்த்து, இவ்வளவுகாலமளவுக்கும் உமது ஆயுள் நாளிருக்கும் விதம் யாதெனக்கேட்டபொழுது அவர் பிரத்தியுத்தாரமாக—"வெள்ளென எழும்பு, இச்சையடக்கமாய்ச் சீவியம்பண்ணு, அதிகம் வேலைசெய்—மனச்சந்தோஷமாயிரு" என்றார். மேலும் நூறுவருடத்திற்கிருந்த வேறொருவரைப் பார்த்து இவ்வளவுகாலத்துக்கு நீநோயிரோடிருக்கும் முகாந்திரமேதெனக்கேட்டபொழுது, அவர் மறுமொழியாக "நான் தயவு தாட்சணியமுள்ளவனாயிருந்தேன்.—ஒருக்காலும் ஒருவருடனுஞ் சண்டைபிடிக்கவில்லை. எனது பசியுந் தாகமும் அடங்கத்தக்க அவ்வளவு சாப்பிட்டுக்கொள்ளுகிறதேயொழிய அதற்கு மிஞ்சப் போசிக்கிறதில்லை. நான் ஒருக்காலுஞ் சோம்பறையனாயிருக்கவில்லை" என்றார்.

சுகத்தைக் காக்கும் வகை.

க. வெள்ளென எழும்பு நேரஞ்செல்லுமளவுமிராதே. உ. ஒவ்வொருகாலமேயும் சரீரத்தைக் கழுவு. அல்லது முழுகிச் சீலையாலே ஈரத்தைத் துடை. ங. காலச்சாப்பாட்டுக்குமுன்னே காலமே ஒவ்வொருநாளும் ஒழுங்காக உலாத்திச் சரீர அப்பியாசத்தைப் பண்ணு. ச. கொஞ்சநேரமேனும் உலாத்தாமல் வெகு நேரத்துக்கு இருந்து வேலைசெய்துகொண்டிராதை. டு. தண்ணீர் குடி. சா. மஸ்துள்ளபானங்களை விலக்கு. எ. தலையிலே குடுகொள்ளவிடாமல் காற்று விழும் அறையிலே நித்திரைகொள்ளு. அ. மட்டுக்குமிஞ்சிச்சாப்பிடாதை. அதிகம் வலிய சாப்பாட்டைப் புசியாதை. கூ. உனது இராச்சாப்பாட்டில் அதிகங் காரசாரமுள்ளவைகளைப் புசியாதை. ய. சாந்தமுஞ் சந்தோஷமுமுள்ள குணத்தையடையப் படி. இவைகளே சுகசீவியாய் வாழுகிறதற்கு நல்ல வகை.

MORNING STAR.

Jaffna, October 24th, 1850.

Sub-marine Telegraph.—The following interesting account of the laying down of the Sub-marine Telegraph between the English and French Coast, which was commenced and completed on the 28th of August, we copy from the correspondence of the Colombo Observer:—

At an early hour the *Goliah* steamer, with the telegraph tackle on board, was ready at the head of Dover pier, with thirty miles of telegraphic wire, one-tenth of an inch in diameter, encased in a covering of gutta percha, the thickness of a little finger, coiled round a large cylinder amidships, which was joined to 300 yds. of the same wire, enclosed in a leaden tube on shore, to prevent it from being bruised by the shingle on the beach, and the vessel steamed at the rate of about three or four miles an hour in a direct track for Cape Crenez, twenty-one miles across channel, lying midway between Calais and Boulogne. As she proceeded, the wire, weighing five tons, was paid out over a roller at the stern of the vessel, the men at every sixteenth of a mile being busily engaged in riveting to the wire square leaden clamps, of from 14 to 24 lbs. weight, to sink it in the bottom of the sea, which on the English coast commences at a depth of 30 feet, and goes on varying from that to 100 and 180 feet, which latter, or 30 fathoms, is the greatest depth ascertained by practical sounding. The whole of the casting out and sinking was accomplished with great success in twelve hours, and complimentary messages instantly passed between both countries, such as "Science unites the divided world," "God save the Queen, and long live the President." After the telegraph had been in operation a few days, the communication become temporarily suspended by an injury to the wire, which was severed in some sunken rocks off Cape Grisnez.

Wellicadde Jail.—We have much pleasure in acknowledging the receipt of a copy of the Report of the Wellicadde Jail, from the Governor, Mr. A. G. Green. It is a very able and interesting Report. We commend it to the attention of all who are interested in the subject of prison discipline. It is indeed pleasing to see that the subject is receiving so much attention in this Island, where, heretofore, this unfortunate class of the community has been so much neglected. Experience has abundantly shown that the character and condition of prisoners are susceptible of great improvement, so that some, after leaving prison, have become useful and respectable members of society; whereas on the old plan of conducting prisons, many a young man, committed for his first offence and that not a very serious one, has found his prison such a school of iniquity, that he leaves it an accomplished villain. Did the limits of our little paper permit, we should be happy to make copious extracts from this interesting Report.

Missionary.—Letters have been received from Mr. and Mrs. Hoisington in America, as late as the middle ot August. Their numerous friends in the Island, both European and Native, will be happy to hear that his health continues to improve in that climate.

Red River of the North.—The English Episcopal Bishop of Prince Rupert's Land, Dr. Anderson, sent out to the Hudson's Bay country by the British government, has written to the American Episcopal Missionary Bishop of the North-west, whose diocese borders on his own, giving an account of his official visit to the settlement on Lake Winnepeg, at the mouth of Red River. A letter from Rev. E. Gear, at Fort Snelling, to the Gospel Messenger, dated May 7, says:

He has consecrated one church at the principal settlement. This church has been recently built at a cost of £1,400; and is mentioned as being spacious and beautiful, and its consecration a matter of great interest, as the first that has been consecrated in Prince Rupert's Land. In this church, on the 23d of December, the Bishop held his first ordination, the candidate being one he brought out from England with him. "Christmas days," he remarks, "I spent most happily with our mutual friend, Mr. Smithurst, and had the great pleasure of administering the Lord's Supper to 86 native Indians in the little church, of which a sketch is given in the Bishop of Montreal's Journal." This little church is near the mouth of Red River, not far from Lake Winnepeg, and has a congregation of nearly 300 Indians, and has been collected by the untiring labors of Rev. Messrs. Cochran and Smithurst, under the fostering care of the Church Missionary Society.

Has one served thee? Tell it to many. Hast thou served many? Tell it not. Nature teaches us that we are all dependent—that we are like cog-weels, pushing each other along by filling up mutual voids.

THE CHRISTIAN LIFE A RACE.

One of the most familiar and forcible figures by which the apostle to the Gentiles would set forth the nature of the Christian's work, is that of the Race. It was evidently an image that dwelt upon his thoughts, and that very naturally suggested itself whenever he contemplated the life of the believer. And it was one which, at the time, as addressed to those who had been familiar with the splendid and imposing games that were regularly celebrated at Olympia or at Delphi, or on the Corinthian isthmus, must have been very suggestive and memorable. It was a figure than which no other could hardly have been selected, more pertinent and striking, and comprehensively descriptive.

In his preparation and mode of life, the Christian was to be like the fleet runner contending for the prize; to be temperate and abstemious; to keep under the body, and bring it into subjection to the purpose of his life, and to the energies of the soul; to keep from encumbering himself with burdens of wealth; and to look away steadfastly from the pleasures that would enervate, and the seductive self-indulgencies that would entangle and hinder him. With a resolute self-denial, with a firmness of purpose and a steadiness of aim which nothing should overthrow, with an energy even, and a mighty enthusiasm, that would not let him stay or stumble, that kept the eye of his anticipation fast fixed upon the goal, that pressed him forward as if with wings, over the rough and slippery ground—the Christian was to press toward the prize of his calling. The feeble faith, the slackening, hesitaing, doubtful purpose—the apostle would argue by this his image that these are inappropriate to the life of the believer. There should be definiteness of purpose, and resoluteness of effort, persistent and decisive, and strong enthusiasm, and an unfaltering zeal, in the disciple who would gain true holiness and its crown.

